**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**நாள்** 23.09.2025

**அசல் வழக்கு எண்.352/2019**

**வா.சா.1 – சண்முகம், த/பெ.சஞ்சீவி பிள்ளை**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

உங்களுக்கு உங்கள் அப்பா உயிருடன் இருந்த காலத்தில் 1995 இல் சிறப்பாக திருமணம் நடைபெற்றது என்றால் 1986 இல் திருமணம் நடைபெற்றது. கேசவன் என்பது யார் என்றால் அவர் என்னுடைய அண்ணன் ஆவார். நிர்மலா தங்கையாவார். அனைவரும் உயிருடன் இருக்கிறார்களா என்றால் கேசவன் காலமாகிவிட்டார். நிர்மலா உயிருடன் உள்ளார். நிர்மலாவுக்கு எப்பொழுது திருமணம் நடைபெற்றது தெரியுமா என்றால் தெரியாது. நிர்மலா என்பதற்கு பிரதிவாதி மற்றும் காலம் சென்ற கேசவன் ஆகியோர் கூட்டாக சேர்ந்து ரூபாய் 3 ½ லட்சம் செலவு செய்து கடந்த 1998 ஆம் ஆண்டு திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் தெரியாது செலவும் செய்யவில்லை. திருமணம் நடைபெற்ற பொழுது உங்கள் அப்பா உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். தங்கையின் திருமணம் சொல்லவில்லை ஏன் என்று எழுத்து மூலமாக கடிதம் ஏதேனும் எழுதினீர்களா என்றால் எழுதவில்லை. உங்கள் அப்பா உயிருடன் இருந்த காலத்திலேயே கடந்த 2007 ஆம் ஆண்டு உங்களுக்கிடையே பாகப்பிரிவினை பிரித்துக் கொண்டு பத்திரம் எழுதிக் கொண்டீர்களா என்றால் எழுதிக் கொண்டோம். அந்த ஆவணத்தில் உங்கள் மகன் சாட்சியாக கையொப்பம் போட்டு உள்ளார் என்றால் சரிதான். அவருடைய பெயர் என்ன என்றால் சரண்ராஜ் ஆகும். உங்கள் அம்மா எப்பொழுது காலமானார் என்றால் 17.06.2017 ஆம் தேதி காலமானார். உங்களது அப்பா இறக்கும் பொழுது ரூபாய் 2 லட்சம் கடன் வைத்துவிட்டு இறந்துவிட்ட விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. உங்கள் அப்பா இருந்த காலத்திலேயே பாகப்பிரிவினை எழுதி அவரவர்களுக்கு உண்டான பாகத்தை ஒதுக்கி கொடுத்துவிட்டதால் உங்கள் அப்பா இருந்த காலம் வரை நீங்கள் வழக்கு எதுவும் போடவில்லை என்றால் சரிதான். அவரவர் பாகத்தை அவரவர்கள் அனுபவித்து வருகிறார்கள் நீங்கள் உரிமை இல்லாத ஒரு சொத்துக்காக வீணாக வழக்கு தாக்கல் செய்து வழக்கு நடத்தி வருகிறீர்கள் என்றால்

சரியில்லை. நீங்கள் கூட்டு சுவாதீனத்தில் இல்லையென்றால் சரியில்லை அடிக்கடி வந்து பார்த்துவிட்டு செல்வேன். நீங்கள் பெங்களூரில் தான் வசிக்கிறீர்கள் என்றால் சரிதான். கடந்த 1988 இல் இருந்து நீங்கள் பெங்களூரில் வசித்து வருவதால் உங்கள் குடும்பத்தில் நடைபெற்ற விவரங்கள் தெரியாது கடன் பெற்ற விவரங்கள் தெரியாது என்றால் சரியில்லை. வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.